O.S.37/2016

**முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை**

அ.வ.எண்.37/2016

வாதி தரப்பு 2வது சாட்சி அப்பாசாமி என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திருமதி. அனுராதா, கிரேடு-1 பெஞ்ச் க்ளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. அப்பாசாமி | வயது | : | 80/23 |
| தகப்பனார் பெயர் | : | ஆண்டியப்பன் | தாலுகா | : | விராலிமலை |
| கிராமம் | : | காரப்பட்டு | தொழில் | : | விவசாயம் |

நாள்-19.03.2024

வா.சா.2,

**8 முதல் 12 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) ராமவிற்பன்னர் என்பவரை எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி வீராச்சாமியை எனக்கு தெரியும். வீராச்சாமியின் அப்பா பெயர் முனியன் விற்பன்னர். வீராச்சாமியின் உடன் பிறந்தவர்கள் மூன்று பெண் பிள்ளைகள், ஒரு ஆண் பிள்ளை. வீராச்சாமியின் தம்பியின் பெயர் பழனிச்சாமி.

2) வீராச்சாமியின் சுய சம்பாத்தியத்தில் வந்த சொத்தினை விற்றார் என்றால் எனக்கு தெரியாது.

3) வழக்கு சொத்து விபரம் பற்றி எனக்கு முழுமையாக தெரியாது என்றால் சரிதான்.

4) வழக்கு சொத்துக்களுக்கு யார் பெயரில் பட்டா உள்ளது என்று எனக்கு தெரியாது.

5) வீராச்சாமி அவரது சுயசம்பாத்ய சொத்தைதான் விற்றுள்ளார் என்றாலும், அதை தவறாக வழக்கு சொத்தில் சேர்த்துள்ளார்கள் என்றாலும் அதுபற்றி எனக்கு தெரியாது.

**6, 14 முதல் 17 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.